# <u>திருமங்கலம் நகராட்சி</u>

## <u>மன்ற கூட்டப்பொருள்</u>

### நகர்மன்றத் தலைவர் திருமதி.எம்.ரம்யா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்

**1)**இந்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்து துறை அமைச்சகம் நியூ டெல்லி உதவி செயற்பொறியாளர் (Toll) **02.11.2018**ம் தேதிய கடிதத்தில் சுஙகச்சாவடிகள் நிறுவுதல் கட்டணம் வசூலித்தல் தொடர்பான விதி **8 (1)** மற்றும் **8 (2)**ன் பிரகாரம் கீழ்கண்டவாறு சுஙகச்சாவடிகள் கட்டண வசூல் மையம் அமைக்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. சுஙகச்சாவடிகள் (Toll gate) நகராட்சி எல்கையில் இருந்து பத்து கிலோமீட்டர் தொலைவிற்கு அப்பால் அமைக்கப்படவேண்டும்.
2. நகராட்சி எல்கையில் இருந்து பத்து கிலோமீட்டர் தூரத்திற்குள் அமைக்கப்படவேண்டிய நிலை ஏற்படின் குறைந்தபட்சம் ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டால் கட்டணம் வசூலிக்கக்கூடாது.
3. ஒரு சுஙகச்சாவடிக்கும் அதே திசையில் உள்ள மற்றொரு சுஙகச்சாவடிக்கும் இடைப்பட்ட தூரம் **60** கிலோமீட்டர்க்குள் இருக்கக்கூடாது.

இந்நிலையில் சுஙகச்சாவடிகள் நிறுவுதல் மற்றும் கட்டணம் வசூலித்தல் தொடர்பான **8 (1)** மற்றும் **8 (2)**ன் விதிகளில் தெரிவித்துள்ள மேற்காணும் அனைத்து நிபந்தனைகளுக்கு முரணாக இந்நகராட்சி எல்கைக்கு மிக அருகாமையில் (சுமார் **2** கிலோமீட்டர் தூரம்) கப்பலூர் சுஙகச்சாவடி அமைக்கப்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதி மற்றும் அதனை சார்ந்துள்ள பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் தஙகளது வாகனஙகளில் சுஙகச்சாவடியை கடக்கும்போது விதிகளுக்கு முரணாக கட்டணம் வசூல் செய்யப்படுவதால் திருமஙகலம் நகர்ப்பகுதி பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள்.

எனவே திருமஙகலம் – கப்பலூர் சுஙகச்சாவடியினை (Toll gate) அவ்விடத்தில் இருந்து உடனடியாக அகற்றக்கோரி நகர்மன்றத்தின் முடிவிற்கு தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

**தீர்மானம் எண்.82:** **கப்பலூர் சுங்கச் சாவடியினை அவ்விடத்திலிருந்து அகற்றிட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**2)**திருமஙகலம் நகராட்சி தற்போதைய பேருந்து நிலையத்தினை ரூ.**720.00** இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் புதிதாக கட்டுவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதால் தற்போதைய பேருந்து நிலையத்தில் உள்ள கடைகளை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலைய கட்டுமானப்பணி மேற்கொள்வதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போதைய பேருந்து நிலைய நகராட்சி கடை, பேருந்து நிலைய கட்டணக் கழிப்பறை, சைக்கிள் ஸ்டாண்டு குத்தகைதாரர்கள் நீதிமன்றத்தில் மேற்கண்ட பணி தொடர்பாக வழக்கு தொடர்ந்து தடையாணை ஏதும் பெறாமல் இருப்பதற்காக இந்நகராட்சியால் திருமஙகலம் சார்பு நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருமஙகலம் கேவியட் மனு தாக்கல் செய்ததற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.**1,03,600/–**னை நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ்.ராமச்சந்திரன் அவர்களுக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு</u>**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.
**2.**நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழஙகியதை மன்றம் அஙகீகரிக்கலாம்.

**ந.க. எண். 1520/2021/இ1**

**தீர்மானம் எண்.83: அனுமதிக்கப்பட்டது.**

**3)**தேசிய வாழ்வாதார திட்டத்தின் கீழ் திருமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் தகுதியான சாலையோர வியாபாரிகள் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021 UPA நாள்.16.06.22 ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது கீழ்கண்டவாறு.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் செய்யப்பட வேண்டிய பணிகள்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை** |
|---|---|---|---|
| 1 | திருமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோமெட்ரிக் முறையில் கணக் கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR code உடனான அடையாள அட்டை ( ID card) தயாரித்து வழங்குதல், விற்பனை சான்றிதழ், (Certificate of vendors) நகர தெரு விற்பனை திட்டம் (SUP) விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல் | Good Hope Foundation,<br>50, 8வது தெரு, ஜவஹர் தெரு,<br>திருமங்கலம்,<br>மதுரை மாவட்டம் | **ரூ.600/–**<br>**1 நபருக்கு** |
| 2 | | Ramasamy Educational and Development Trust, Madurai. | **ரூ.650/–**<br>**1 நபருக்கு** |

மேற்காணும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண் : 1951/2014/C1**

**தீர்மானம் எண்.84: பதிவு செய்யப்பட்டது.**

**4)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் இணைப்பு இல்லாத அனைத்து வீடுகளுக்கும் சிறிய மற்றும் நடுத்தர நகர் வளர்ச்சி திட்டம் சுழற்சி நிதி (UIDSSMT Scheme – Revolving Fund ) திட்டத்தின் கீழ் ரூ.360.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக 10,210 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க 07.02.2019ம் தேதி திரு.எம்.பாலமுருகன் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதுடன், இப்பணிக்கான கால வரம்பு கடந்த 06.02.2021ம் தேதி உடன் முடிவடைந்த நிலையில், மேற்காணும் திட்டத்தின் கீழ் இந்நாள் வரை 1,350 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டள்ளது.

இந்நிலையில் இப்பணிக்கான ஒப்பந்ததாரர் திரு.எம்.பாலமுருகன் தனது 01.07.2022ம் கடிதத்தில் பணி செய்து முடிக்க வேண்டிய கால நிர்ணய அளவு முடிவுற்று 16 மாதங்கள் கூடுதலாகி விட்டது எனவும் இக்காலக்கட்டத்தில் கொரோனா பாதிப்பு காரணமாக பணி நடைபெறுவது தடைபட்டதுடன் தற்போது பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் வேலையாட்கள் கூலி அதிகமாகி விட்டதால் பணியினை தொடர்ந்து செயல்படுத்த முடியாத சூழல் உள்ளதால், இப்பணிக்கான தனது ஒப்பந்தத்தை ரத்து செய்து தர கோரியுள்ளார்.

தற்போது இந்நகராட்சி பகுதிகளில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணி (UIDSSMT Scheme – Revolving Fund) திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு பதிலாக

AMRUT – 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடிதம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் ஒப்பந்ததாரரின் கோரிக்கையை ஏற்று UIDSSMT திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இப்பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2**குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை ரத்து செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 630/2018/இ1**

**தீர்மானம் எண்.85: அனுமதிக்கப்பட்டது.**

**5)**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசாணை (MS) எண். 88 நாள்.17.06.2022 கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–23ல் ரூ. 188.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வார்டு எண்–9 உசிலை சாலை புல்பேட்டை வளாகத்தில் கற்றல்மையம் (Knowledge Centre) கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழஙகி அரசாணை வரப்பெற்றுள்ளதனை தொடர்ந்து தலைமபொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 001/2022/டிஓ1, நாள்.27.06.2022 ல் இப்பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

எனவே அவ்விடத்தில் கற்றல்மையம் கட்டுவதற்கு தற்போது அவ்விடத்தில் அமைந்துள்ள பயனற்ற நிலையில் உள்ள கட்டிடஙகளை இடித்து அப்புறப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.90 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

**1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 1064/2022/இ1**

**தீர்மானம் எண்.86: அனுமதிக்கப்பட்டது.**

**6)**திருமஙகலம் நகராட்சிக்குட்பட்ட செஙகுளத்தில் உள்ள நகராட்சிக்கான ஆரம்பப்பள்ளி வளாகத்தில் உள்ள அஙகன்வாடி மையம் சேதமடைந்துள்ளதால் இதனை சரிசெய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்விநிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.87: அனுமதிக்கப்பட்டது.**

7)திருமங்கலம் நகராட்சி வார்டு எண். 25 தெற்குதெரு காந்திசிலை முன்புறம் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி பொதுசுகாதார பாதிப்பு ஏற்படுவதால் அவ்விடத்தில் சிறுபாலம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.88: அனுமதிக்கப்பட்டது.**

8)திருமங்கலம் நகராட்சி உசிலை சாலை புல்பேட்டை வளாகத்தில் பயனற்ற நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்துவதற்கான பணியினை ரூ.2.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தலைவரின் 19.07.2022ம் தேதிய முன்அனுமதியின் படி இப்பணிக்கு 02.08.2022ம்தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகள் கீழ்கண்டவாறு

| | |
|---|---|
| 1. திருமதி.பி.தேன்மொழி மதுரை | மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.20 சதவிகிதம் குறைவு |
| 2. ஸ்ரீ சாய் பில்டர்ஸ் திருமங்கலம் | மதிப்பீட்டினைக் காட்டிலும் 1.08 சதவிகிதம் அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.20 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திருமதி.பி.தேன்மொழி, மதுரை ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண். 1064/2022/இ1**

**தீர்மானம் எண்.89: அனுமதிக்கப்பட்டது.**

9)திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 செங்குளம் கிழக்கு 9வது தெருவில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணியில் சாலைகள் சேதாரமுற்று போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளதால் இதனை சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட தெருவில் பேவர்பிளாக் மற்றும் சிமெண்ட் சாலை சீரமைப்பு (Patch work) பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.60 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.90: அனுமதிக்கப்பட்டது.**

**10)**திருமங்கலம் நகராட்சி வார்டு எண்.12 ராஜாஜி 1வது தெருவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசைபம்ப் மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் ஆகும். இப்பணியினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.91: அனுமதிக்கப்பட்டது.**

**11)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட மௌலானா ஆசாத்தெருவில் உள்ள நகராட்சி முஸ்லீம் பெண்கள்ஆரம்பப்பள்ளி வளாகத்தில் உள்ள அஙகன்வாடி மையம் சேதமடைந்துள்ளதால் இதனை சரிசெய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.30 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி கல்விநிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.92: அனுமதிக்கப்பட்டது.**

**12)**திருமங்கலம் நகராட்சி வார்டு எண்.15 மதுரை சாலை மறவன்குளம் மேற்குபக்கம் உள்ள பேருந்து நிறுத்த பயணியர் நிழற்குடை மற்றும் வார்டு எண்.25 விருதுநுகர் சாலை தெற்கு தெரு கிழக்குபக்கம் உள்ள பயணியர் நிழற்குடை சேதாரமடைந்து உள்ளதால் பயணிகள் நலன் கருதி அதனை சரிசெய்வது அவசியமாகிறது. எனவே மேற்காணும் இரண்டு பயணியர் நிழற்குடையினை மராமத்து பணி மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.70 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.93: அனுமதிக்கப்பட்டது.**

13)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (NS) அரசாணை (MS) எண்.88 நாள். 17.06.2022-ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022-23-ன் கீழ் ரூ.188.00 இலட்சம் மதிப்பீட்டில் உசிலை சாலை புல்பேட்டை வளாகத்தில் கற்றல்மையம் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.30 நாள். 27.06.2022ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இப்பணிக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை-28 அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 001/2022/DO, நாள். 27.06.2022-ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 15.07.2022-ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் Online மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில்

திருமதி.P.தேன்மொழி, மதுரை மற்றும் திரு.Nமுனியசாமி மதுரை ஆகிய இருவரின் தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியார்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 18.07.2022-ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு.

1. திருமதி.P.தேன்மொழி
   விஸ்வநாதபுரம் மதிப்பீட்டினைக்காட்டிலும் 10.15% அதிகம்
   மதுரை

2. திரு.Nமுனியசாமி மதிப்பீட்டினைக்காட்டிலும் 15.00% அதிகம்
   கலைநகர்,
   மதுரை

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால், மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைவிகிதம் குறைவாக கொடுத்துள்ள. திருமதி.P.தேன்மொழி, விஸ்வநாதபுரம், மதுரை என்பவரின் மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 20.07.2022ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.90% உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளது, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்காணும் திட்ட பணியினை முழுவதுமாக விரைவில் முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட வேண்டியுள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2-ன்படியும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், திட்டப்பணியினை குறித்த காலத்தில் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும், மன்றம் அங்கீகரிக்கலாம்
3. மேற்காணும் திட்டப்பணிக்கான மதிப்பீடு 2021-22ம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறை தரவிலை அட்டவணை (Schedule Of Rate) ன் அடிப்படையில் ஒப்பந்ததாரரால் கூடுதல் விலைவிகிதம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது 2022-23ம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறை தரவிலை அட்டவணை 19.07.2022ம் தேதி முதல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்ததாரர் வழங்கப்பட்டுள்ள கூடுதல் விலைவிகிதம் என்பது 2022-23ம் ஆண்டிற்கான தரவிலை அட்டவணை மதிப்பீட்டினை விட குறைவானதாகவே இருக்கும் என்பதால் கூடுதல் விலைவிகிதத்தை அனுமதிக்கலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி கூடுதல் விலைவிகிதத்தினை ஏற்பதால் ஆகும் மிகை செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் ஈடு செய்து கொள்ளவும், அனுமதிக்கலாம்.

ந.க.எண்.677/2022/இ1

**தீர்மானம் எண்.94: அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

14)மனுதாரர் 20.07.2022ம் தேதிய விண்ணப்ப மனு மற்றும் நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் கடித ந.க.எண்.1021/2022/மதி2, நாள் 12.07.2022ன்படி மனையின் உரிமையாளர் திரு.ஜி.பாகிரதி மற்றும் இருவர் கதவு எண்.1/2004/3, சத்யாசாய் நகர், ரோசல்பட்டி மதுரை அவர்களின் மனைப்பிரிவு சம்பந்தமாக திருமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மறவன்குளம் கிராமம், வார்டு–டி, பிளாக்–25, பழைய சர்வே எண்.39/1A2, புதிய டவுன் சர்வே எண்.106/1, 106/3–ல் 1.00 ஏக்கர் (4046.85 பரப்பளவில்) அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல்/ திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட உத்தரவு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ம.உ.தி.கு.எண்143/2022 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 49ன்கீழ் மற்றும் அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் 31.01.2020ன்படியும், திட்ட அனுமதி எண்.151/2022 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு**

மதுரை மாவட்டம் – திருமங்கலம் வட்டம் – திருமங்கலம் நகராட்சி – மறவன்குளம் கிராம் – வார்டு–டி, பிளாக்–25, பழைய சர்வே எண்.39/1ஏ2, புதிய டவுன் சர்வே எண்.106/1, 106/3ல்

| விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 1.00 ஏக்கர் (4046.85 ச.மீ) | |
| ஒதுக்கிய மனைகள் | 25 மனைகள் | |
| **பொது ஒதுக்கீடு** | | |
| மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது | –– | |
| 2)உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | 913.98 ச.மீ. | |
| 3)உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | 17.14 ச.மீ. | (0.54) |
| 4)தமிழ்நாடு மின் உற்பத்தி ஒதுக்கீடு | 17.16 ச.மீ | (0.55) |
| **விற்பனைக்குரியவை**<br>EWS மனைகளின் பரப்பு மனை எண்கள் | –– | |

மேலும் சிறப்பு நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மனைப்பிரிவு (ம.வ/ம.உ.தி.கு.எண்.143/2022) வரைபடத்தின்படி உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் உட்பட 913.98ச.மீ. மற்றும் உள்ளாட்சிக்கான பொது உபயோகம் 17.14 ச.மீ. ஆகிய இடங்களை தானப் பத்திரமாக திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் பெயருக்கு பத்திரப் பதிவு எண்.TP/122102331/2022 (ஆவண எண்.5329/2022) மற்றும் TP/1220966252/2022 (ஆவண எண்.5330/2022) பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி தான ஆவணங்களை மன்றம் ஏற்கலாம். மேற்படி மனைப்பிரிவிற்கு செல்லக்கூடிய அணுகுசாலையினை மனுதாரர் தார்சாலையாக அமைக்கப்பட்டு புகைப்பட நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**அ.கு**

1) உதவி இயக்குநர் நகர் ஊரமைப்புத் துறை, மதுரை மாவட்டம் அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி ஒப்புதல் அளிக்கலாம்.

2) நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய அடிப்படை கட்டமைப்பு கட்டணங்கள் அனைத்தும் கணக்கீடு செய்து தொகையினை மனுதாரரிடமிருந்து வசூல் செய்த பின்பு இறுதியான அனுமதி வழங்க மன்றம் இசைவு தெரிவிக்கலாம்.

**தீர்மானம் எண்.95: அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**15)**திருமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு குப்பை அள்ள பயன்படுத்தப்படும் வாகனம் எண்.TN 58AZ6123–க்கு தகுதிச்சான்று பெறுவதற்கு பழுதுநீக்கம் செய்வதற்கு **13.07.2022** அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | Tirumangalam Agro Engineering & Service Co-op Center Ltd., | ரூ.**149506/–** |
| 2 | MD(SPC) 204 Chellampatti Agro Engineering & Service Co-op Center Ltd., | ரூ.**153754/–** |

அ.கு

**1)**அனுமதிக்கலாம்.

**2)** Tirumangalam Agro Engineering & Service Co-op Center Ltd., நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**3)** பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.96: அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**16)**திருமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN-58AT8795 மற்றும் TN-58TATA ACE8709 வாகனத்திற்கு பழுதுநீக்கம் செய்வதற்கு **13.07.2022** அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பழுது நீக்கம் செய்ய இரண்டு வாகனத்திற்கும் சேர்த்து தொகை |
|---|---|---|
| 1 | Tirumangalam Agro Engineering & Service Co-op Center Ltd., | ரூ.**80298/–** |
| 2 | MD(SPC) 204 Chellampatti Agro Engineering & Service Co-op Center Ltd., | ரூ.**83072/–** |

அ.கு

**1)** வரிசை எண்.**1**ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனமான Tirumangalam Agro Engineering & Service Co-op Center Ltd., நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**2)** பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மேற்கண்ட நிறுவனத்திற்கு தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.97:		அனுமதிக்கப்பட்டது.**

17)திருமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு குப்பை அள்ள பயன்படுத்தப்படும் வாகனம் எண்.TN 58AZ6122, TN 58AZ6123, TN 58AE6184 வாகனங்களுக்கு புதிதாக பேட்டரி பொருத்தும் பணிக்கு 13.07.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணம் | தொகை |
|---|---|---|---|
| 1 | Ajay Traders | 3 | ரூ.33000/– |
| 2 | Mohamadu Motors | 3 | ரூ.34500/– |
| 3 | M.S. ஆட்டோ டிங்கர் ஒர்க்ஸ் | 3 | ரூ.35800/– |

அ.கு

1)அனுமதிக்கலாம்.

2)வரிசை எண்.1ல் கண்டுள்ள குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனமான Ajay Traders நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

3) பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அதற்கான செலவினத் தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.98:		அனுமதிக்கப்பட்டது.**

18) திருமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள துப்புரவுப் பணியாளர்கள், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் நகர்நல மையப் பணியாளர்கள் கீழ்க்கண்டுள்ள எண்ணிக்கையில் 2022–23ம் ஆண்டிற்கான சீருடைகள், தையற்கூலி மற்றும் சீருடைப் படிகள் வழங்கிட உத்தேச செலவினம் ரூ.1,50,000/– மன்றத்தின் அனுமதிக்கு.

| | | |
|---|---|---|
| 1 | துப்புரவுப் பணியாளர்கள் | ஆண்கள்–36<br>பெண்கள்–15 |
| 2 | துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் | 4 (ஆண்கள்–2, பெண்கள்–2) |
| 3 | கழிவு நீரேற்று நிலைய காவலர் | 1 |
| 4 | ஓட்டுநர்கள் | 4 |
| 5 | நகர்நல மைய துப்புரவுப் பணியாளர்கள் | 3 |

அ.கு

1) அனுமதிக்கலாம்.

2)அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தேவையான சீருடைகள் வாங்கி வழங்கவும், உரிய சீருடை கூலி வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.758/2015/அ2

**தீர்மானம் எண்.99:		அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்)மு.ரம்யா**
**நகர்மன்றத் தலைவர்,**
**திருமங்கலம்.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**

திருமங்கலம் நகராட்சி.